**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் பகுதி – 2 - 2017**

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப் பகுதி - 2 இன் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 யூன் 03 ஆம் திகதிய 3030 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப் பகுதி - 2 இன் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சாகவிருந்த தற்போதைய மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. கொழும்பு பெரும்பாக பகுதியிலுள்ள நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவை மற்றும் முகாமைத்துவத்தை முன்னேற்றுதல் மற்றும் கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் வினைத்திறன் மற்றும் நிதிசார் நிலைத்திருக்கும் தன்மையை முன்னேற்றுதல் என்பன முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,230.60 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 9.44 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 1,042.88 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 8.00 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 187.72 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 1.44 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்பு செய்யப்படும். இந்த அறிக்கையானது கொழும்பு மாநகர சபையால் அமுல்ப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் மீது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களை கொண்டுள்ளது. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 செப்தெம்பர் 23 இல் தொடங்கியிருந்ததுடன் 2018 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு

செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள் நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2017 ஆம் ஆண்டின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 8.00 | 1,042.88 | 200.00 | 0.43 | 65.34 | 0.62 | 92.70 |
| இலங்கை அரசாங்கம் | 1.44 | 187.72 | 80.00 | 0.10 | 15.94 | 0.15 | 23.87 |
| **மொத்தம்** | **9.44** | **1,230.60** | **280.00** | **0.53** | **81.28** | **0.77** | **116.57** |

மேற்படி தகவல்களின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ரூபா 280 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில், நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதிலுள்ள மந்தமான செயலாற்றல் காரணமாக ஒதுக்கீட்டின் 29.03 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 81.28 மில்லியன் தொகை மாத்திரமே மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டத்தின் நிதித் திட்டங்களின் பிரகாரம், மொத்த ஒதுக்கீட்டில் 77.75 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 7.34 மில்லியன் தொகை 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 8.15 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 116.57 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 0.77 மில்லியன் தொகை மாத்திரமே மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நடவடிக்கைகளானது (அ) எதிர்காலத்தில் அமுல்ப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப் பகுதி - 02 இற்கான விபரமான வடிவமைப்புக்களினை தயாரிப்பதற்கான வடிவமைப்பு, மேற்பார்வை மற்றும் நிறுவக அபிவிருத்தி ஆலோசனை மற்றும் கழிவகற்றல் சேவைக்கான நிறுவக சீர்திருத்தங்களிற்கான சிபாரிசுகளை முறைப்படுத்துதல் மற்றும் (ஆ) துப்பரவாக்குதல் மற்றும் சாக்கடைகளின் சீசீரீவீ (CCTV) கணக்கெடுப்பு ஊடாக 125 கிலோமீற்றர்கள் நீளமான சாக்கடை வலையமைப்பின் நிபந்தனை மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல் என்பவற்றைக் கொண்டிருந்தது. வடிவமைப்பு, மேற்பார்வை மற்றும் நிறுவக அபிவிருத்திக்கான ஆலோசனை ஆதரவின் கீழான வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதன் செயன்முன்னேற்றம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலக்குகளிற்கு பின்னோக்கியிருந்தன. அவற்றின் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிகழ்ச்சித்திட்ட உடன்படிக்கை 2014 யூன் 03 இல் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் ஆலோசனையாளர்கள் 2016 ஏப்ரலில் நியமிக்கப்பட்டிருந்ததுடன் உரிய ஆலோசனையாளர்கள் 2016 யூன் மாதத்தில் வேலைத்தளங்களில் அணிதிரண்டிருந்தனர். இது இரண்டு வேலை பொதிகள் தாமதமாகியமைக்கு பிரதானமான காரணமாக இருந்தது.

(ஆ) மேலும், கொழும்பு மாநகர சபையின் நிறுவக அபிவிருத்தி வடிகாலமைப்பு பிரிவின் கீழான நடவடிக்கைகள் நிறுவக அபிவிருத்தி நிபுணரை ஆட்சேர்ப்புச் செய்வதிலுள்ள தாமதங்கள் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், துப்பரவாக்குதல் மற்றும் சாக்கடைகளின் சீசீரீவீ கணிப்பீடுகள் ஊடாக 125 கிலோமீற்றர்கள் நீளமான சாக்கடை வலையமைப்பின் தர மதிப்பீட்டின் கீழான வேலைகளின் ஆரம்ப நோக்கெல்லையானது மீளாய்வாண்டின் போது 108 கிலோமீற்றர்களிற்கு குறைக்கப்பட்டிருந்தது. ஏனைய செயற்திட்டத்தால் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளுடன் சீசீரீவீ சாக்கடை வலையமைப்பின் கீழான வேலைகள் மேற்பொருந்துதல், விசேட சாதனங்கள் தேவைப்படுதல் மற்றும் கிரயங்கள் எல்லை மீறுதல் போன்ற பல விடயங்களை கருத்திற்கொண்டு வேலைகளின் புதிய நோக்கெல்லை தீர்மானிக்கப்பட்டிருந்ததென செயற்திட்டப் பணிப்பாளர் விளக்கமளித்திருந்தார்.

(ஆ) சாக்கடை வலையமைப்பிற்கான சீசீரீவீ புலனாய்வு மற்றும் சொத்து முகாமைத்துவ தரவுத் தளம் உள்ளடங்கலாக சாக்கடைகளை துப்பரவாக்குதல் மற்றும் வலையமைப்பு வேலைகளின் தர மதிப்பீடுகள் மீதான ஒப்பந்தம் தொடர்பான கேள்விகள் 2017 யூலை 27 இல் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய மொழி கேள்வி ஆவணத்தில் விசேடமாக குறிப்பிடப்பட்டிருக்காததன் விளைவாக உரிய விலைமனுக்கள் வெவ்வேறு மொழிகளில் சமர்ப்பிக்கப்பட்டமையால் கேள்வி ஆவணங்களின் மதிப்பீடு மீதான செயன்முறை 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயன்முறையிலிருந்தது.